1995 ஏப்ரல் 10] [திரு. டி. ஜெயகுமார்]

பொதுத் துறையினுடைய செயலர் அவர்களும், கால்நடைப் பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறைச் செயலர் அவர்களும், ஆணையர் அவர்களும் இலங்கையிலுள்ள இந்தியன் ஹை-கமிஷனர் திரு. நரேஷ்வர் தயாள் அவர்களோடு தொடர்பு கொண்டதிலே-- அதுமட்டுமல்லாமல் இந்திய ஹை-கமிஷனர் அவர்கள் இலங்கையிலுள்ள திரு. ரமேஷ், செகண்ட் செக்ரட்டரி அவர்களோடு தொடர்பு கொண்டதிலே-- தற்போது இலங்கை கடற்படையினருடைய பாதுகாப்பிலே, அந்த 19 மீனவர்களும் பத்திரமாக இருக்கின்றார்கள் என்ற செய்தி கிடைத்திருக்கிறது. இன்னும் 2 நாட்களிலே அவர்கள் தாயகம் திரும்பி விடுவார்கள் என்ற செய்தியை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

4. ஒழுங்குப் பிரச்சினை

உறுப்பினர் திரு. ச. அழகிரி 29-3-1995 அன்று அவையில் தெரிவித்த ஒரு கருத்து குறித்து

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன பாயின்ட் ஆஃப் ஆர்டர்?

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தேசப் பிதா மகாத்மா காந்தி அவர்களைப் பற்றியும், ஜவகர்லால் நேரு அவர்களைப் பற்றியும் இங்கே அவதூறாக காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள் பேசினார்கள். மகாத்மா காந்தி அவர்களும், ஜவகர்லால் நேரு அவர்களும் காங்கிரஸ் கட்சிக்கு மட்டும் சொந்தமானவர்கள் அல்ல. தேசப் பிதா இந்தியாவிற்கே சொந்தமானவர். (குறுக்கீடு) அந்த விஷயம் குறித்து மாண்புமிகு உறுப்பினர் அழகிரி பேசியதற்கு இதுவரையில் மன்னிப்பு கேட்கவில்லை. அவர் வருத்தமும் தெரிவிக்கவில்லை. அவர் வருத்தம் தெரிவிக்க வேண்டும்; மன்னிப்பு கேட்க வேண்டுமென்று நாங்கள் பலமுறை கோரியும்கூட அந்த உறுப்பினர் அதைச் செய்யாத காரணத்தினால்... (குறுக்கீடு)

திரு. பி.வி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

[*1995 ஏப்ரல் 10*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இராஜேந்திரன், திரு. சிங்காரம் பேசி முடிக்கட்டும், பிறகு உங்களுக்கு பாயின்ட் ஆஃப் ஆர்டருக்கு அனுமதி தருகிறேன். உட்காருங்கள்.

திரு. ஆர். சிங்காரம்: நான் பேசிக்கொண்டு இருக்கும்போது, அவர் எப்படி பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்பலாம்? He has no business to raise point of order. *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இராஜேந்திரன், திரு. சிங்காரம் பேசி முடித்து விடட்டும். அவர் பேசி முடித்ததற்குப் பிறகு உங்களுக்கு அனுமதி தருகிறேன். உட்காருங்கள். *(குறுக்கீடு)* திரு. சிங்காரம் பாயின்ட் ஆஃப் ஆர்டரில் பேச ஆரம்பிக்கும்போதே நீங்கள் பாயின்ட் ஆஃப் ஆர்டர் கேட்கிறீர்களே, உட்காருங்கள்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள் மன்னிப்பு கேட்க வேண்டும். மகாத்மா காந்தி இந்த நாட்டிற்கு சுதந்திரம் வாங்கிக் கொடுத்தவர். *(குறுக்கீடு)*

திரு. பி.வி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இராஜேந்திரன், என்ன பாயின்ட் ஆஃப் ஆர்டர்? *(குறுக்கீடு)* திரு. சிங்காரம், உட்காருங்கள்.

திரு. பி.வி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்றொரு உறுப்பினரின் மீது ஒரு குற்றச்சாட்டையோ அல்லது அவர் பேசியதைப்பற்றி மீண்டும் பேச வேண்டுமென்பதற்கோ உங்கள் மூலமாக முன்பாகவே அவருக்கு அட்வான்சாக நோட்டீஸ் தரப்பட வேண்டுமென்று ஒரு விதி இருக்கிறது. *(மணியடிக்கப்பெற்றது)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கெனவே, திரு. சிங்காரம் அவர்கள் இந்த அவையில் கேட்டு, சம்பந்தப்பட்ட உறுப்பினர் வந்த உடன் நீங்கள் அதுபற்றிக் கேட்கலாம் என்று நான் ஏற்கெனவே சொல்லி இருக்கிறேன். *(குறுக்கீடு)* இந்த அவையிலேயே முன்னர் ஒருநாள் இதைப்பற்றி எழுப்பியதற்கு, இந்தப் பிரச்சினையை அந்த உறுப்பினர் அவையில் இருக்கும்போது கேட்டால் அதற்கு விளக்கம் கிடைக்கும் என்று நான் சொன்னேன். *(குறுக்கீடு)* அந்த உறுப்பினர் வந்தவுடன் நீங்கள் இதைப்பற்றி எழுப்பலாம் என்று நான் அவரிடம்

அன்றைக்கே சொல்லி இருக்கிறேன். அதைப்போல, அவர் இன்றைக்கு அதுபற்றி எழுப்புகிறார். (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) இந்த அவையில் பேசப்பட்ட பிரச்சினை குறித்து திரு. சிங்காரம் பேசுகிறபோது (குறுக்கீடு) உட்காருங்கள் நான் அதுகுறித்து-- என்ன சொல்கிறேன் என்று கேட்டால்தானே உங்களுக்குப் புரியும்-- (குறுக்கீடு) ஏற்கெனவே பேசப்பட்ட ஒரு குறிப்புக்கு அவர் வருத்தம் தெரிவிக்க வேண்டும் அல்லது மன்னிப்பு கேட்க வேண்டும் என்று அவர் கேட்கிறார். அதை நான் வற்புறுத்த முடியாது. (குறுக்கீடு) அதை வற்புறுத்த முடியாது என்று நான் அவரிடம் ஏற்கெனவே சொல்லி இருக்கிறேன். (குறுக்கீடு) அதை எக்ஸ்புஞ்ச் பண்ண வேண்டிய அவசியம் இல்லை. அவர் ஏற்கெனவே இந்த அவையில் பேசியதைப் பற்றி, திரும்பவும் திரு. சிங்காரம் அதைப்பற்றி எழுப்ப வேண்டுமென்றார். அதற்கு, அந்த உறுப்பினர் வந்தவுடன் இதைப்பற்றி எழுப்பலாம் என்று நான் சொல்லி இருக்கிறேன். ஆகவே, இப்போது திரு. சிங்காரம் அதைப்பற்றி எழுப்புகிறார். (குறுக்கீடு) ஏற்கெனவே இது இந்த அவையில் எழுப்பப்பட்ட பிரச்சினை. (குறுக்கீடு) அவர் பேசி முடித்து விடட்டும். (குறுக்கீடு) அவர் பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்ப வேண்டுமென்றார், அதனால் அனுமதித்தேன். அவர் பேசி முடித்து விடட்டும். (குறுக்கீடு) திரு. சிங்காரம் பேசி முடியுங்கள்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகாத்மா காந்தி அவர்கள் இந்த நாட்டிற்கு சுதந்திரம் வாங்கிக் கொடுத்த காரணத்தினாலேதான்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிங்காரம், அதைப்பற்றி நீங்கள் அதிகமாகப் பேச வேண்டாம். (குறுக்கீடு) நீங்கள், திரு. அழகிரி பேசிய பேச்சுக்கு அவர் வருத்தம் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டீர்கள். அதைப்பற்றி அவர் வந்தபிறகு கேளுங்கள் என்று சொல்லி விட்டேன். இப்போது நீங்கள் அதைப்பற்றி மட்டும் கேட்கலாம். (குறுக்கீடு)

:

முற்பகல் 11-15

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள் மன்னிப்புக் கேட்க வேண்டும் அல்லது வருத்தம் தெரிவிக்க வேண்டும். ஆனால், அவர் வருத்தமும் தெரிவிக்காமல் மன்னிப்பும் கேட்காமல் இருக்கின்றார். அதே நேரத்தில் எதிர்க்கட்சித் தலைவரும் இங்கே அதைப் பார்த்துக்

கொண்டிருக்கிறார்; தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவரும் இங்கே அதைப் பார்த்துக் கொண்டிருக்கிறார் என்று சொன்னால், மகாத்மா காந்தியைப் பற்றியும், நேருவைப் பற்றியும் *(கூச்சல்-குழப்பம்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி. திரு. அழகிரி *(கூச்சல்-குழப்பம்)*

திரு. ஆர். சிங்காரம்: அழகிரி அவர்கள் மன்னிப்புக் கேட்க வேண்டும். மன்னிப்புக் கேட்கும் வரையில் நாங்கள் ஓய...*(கூச்சல்-குழப்பம்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அழகிரி, நீங்கள் வருத்தம் தெரிவிப்பதாக இருந்தால் தெரிவிக்கலாம். *(கூச்சல்-குழப்பம்)* எதிர்க்கட்சித் தலைவர்.

***திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்:** அன்றையதினம் அழகிரி அவர்கள் பேசியபோது அவதூறாக எதையும் சொல்லவில்லை. ஒப்பீடு ஒன்றைச் சொன்னார்கள். அதுவும்கூட இந்த அவையில் தேச பிதா மகாத்மா காந்தியடிகளை, இந்தத் தேசத்தினுடைய, நவீன இந்தியாவினுடைய சிற்பியாக விளங்கிய ஜவஹர்லால் நேரு அவர்களுடைய பெயரையும் சர்ச்சைக்கு உரிய பொருளாக இங்கே விவாதிக்க வேண்டாம், அதை நிறுத்தி விடுவோம் என்று அவை முன்னவர் அவர்கள் கூற, அதை நான் அப்படியே ஏற்றுக்கொண்டு அதோடு அதற்கு முற்றுப்புள்ளி வைத்து விடவேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டேன்.

இரண்டாவது, மீண்டும் மீண்டும் அவதூறாகப் பேசினார் என்று சொல்லுவது ஒரு தவறான குற்றச்சாட்டு. அப்படிச் சொல்வதுதான் அவதூறு, மிகப்பெரிய அவதூறு. அந்த மாதிரி எதுவுமே சொல்லவில்லை என்பது ஒன்று. மகாத்மா காந்தியடிகளைப்பற்றி திரு. அழகிரி அல்ல, யார் தவறாகப் பேசினாலும் அவர்கள் சார்பிலே நான் மன்னிப்புக் கேட்கத் தயாராக இருக்கிறேன். மகாத்மா காந்தியாக இருந்தாலும் சரி, பண்டித ஜவஹர்லால் நேருவாக இருந்தாலும் சரி, காங்கிரஸ் குடும்பத்தைச் சேர்ந்த எந்தப் பெரிய தலைவர்களுடைய பெயரும் சர்ச்சைக்குரிய பொருளாக அல்லது அவதூறாக யார் சொன்னாலும் அவர்கள் மன்னிப்புக் கேட்காவிட்டால் நான் நிச்சயமாக இந்த அவையின் முன்னாலே வந்து மன்னிப்புக் கேட்க ஒருபோதும் தயங்க மாட்டேன். ஆனால், அன்றையதினம் அவதூறாகப் பேசினார் என்பதற்காக அந்தச் சர்ச்சையை நிறுத்தி விடுவோம் என்று சொல்லவில்லை; சர்ச்சைக்குரிய பொருளாக அது மாறக்கூடாது என்று

அவைமுன்னவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதையே நானும் குறிப்பிட்டு நீங்கள் ஏற்றுக் கொண்டு விட்டீர்கள். பிறகு மீண்டும் அந்தப் பிரச்சினையை இங்கே எழுப்புவது வேறு ஏதோ திசை திருப்ப வேண்டுமென்ற நோக்கத்தோடு செய்யப்படுகிறதே தவிர, திரு. அழகிரி அன்றையதினம் அவதூறாகப் பேசினார் என்பது ஏற்றுக்கொள்ளப்பட முடியாத கற்பனையான ஒரு கட்டுக்கதை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிங்காரம், உட்காருங்கள். நீங்கள் கேட்டீர்கள், சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) நீங்கள் பேச்சை முடித்துக் கொள்ளலாம். திரு. சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: நான் பேசிக்கொண்டிருக்கிறபொழுது எனக்கு முன்னே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர் ஈஸ்வரன் அவர்கள், ** சொல்கிறார். (கூச்சல்-குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை விட்டு விடுவோம். அவ்வாறு பேசியிருந்தால் கண்டிக்கத்தக்கது. (குறுக்கீடு) நீங்கள் பேச்சை முடித்து விடலாம்.

திரு. ஆர். சிங்காரம்: பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அன்றே இதைச் சர்ச்சைக்குரிய பொருளாக ஆக்க வேண்டாமென்று சொன்னதன் மூலமாக, தவறு இழைத்து இருக்கிறார் என்று தான் பொருள். அவர் பேசிய பேச்சு அத்தனையும் அவைக்குறிப்பிலே இருக்கிறது. அதை நீங்கள் படியுங்கள். அவர்கள் கேட்கட்டும். அதில் தவறு இல்லாவிட்டால் நான் மன்னிப்புக் கேட்கத் தயார்; தவறு இருந்தால் அவரும், அவரை ஆதரிக்கின்ற எதிர்க்கட்சித் தலைவரும், அவர்களை ஆதரிக்கின்ற தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் அவர்களும் மன்னிப்புக் கேட்கத் தயாரா என்று மட்டும் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்கள் மன்னிப்புக் கேட்பது, கேட்காதது அவர்களைப் பொறுத்தது. மன்னிப்புக் கேட்டுத் தான் தீர வேண்டுமென்று நான் வற்புறுத்த முடியாது. ஆனால் நான் ஏற்கனவே சொன்னதுபோல அன்றையதினம் எழுப்பப்பட்ட வேறு ஒரு பிரச்சினைக்கு அவர் உதாரணமாக மகாத்மா காந்தியடிகளையும், ஜவஹர்லால் நேரு அவர்களையும் இழுத்தது தவறான கூற்றுத்தான் என்பதை ஏற்கெனவே நான் சொல்லியிருக்கிறேன். அவசரப்பொது

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு. (குறுக்கீடு) அது அவர்களைப் பொறுத்தது. நான் வற்புறுத்த முடியாது. தவறானதுதான். அன்றைக்கு அவர்கள் பேசியது தவறானதுதான் என்று நான் சொல்லிவிட்டேன். மன்னிப்புக் கேட்பதும், கேட்காததும் அவர்களைப் பொறுத்தது. (குறுக்கீடு)

திரு. ஆர். சிங்காரம்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** முடியாது. அதெல்லாம் தவறு. கண்டிக்கத்தக்கது. (குறுக்கீடு) கண்டிக்கத்தக்கது. அதெல்லாம் வேண்டாம். (கூச்சல்-குழப்பம்) வேண்டாம். ** இங்கே இடமில்லை. (கூச்சல்-குழப்பம்) திரு. ஈஸ்வரன், இதெல்லாம் சரியில்லை. அதெல்லாம் அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. **இங்கே இருக்கக் கூடாது.

திரு. ச. அழகிரி: இருக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) இருக்கலாம் என்று நீங்கள் சொல்லலாம். நான் அனுமதிக்கவில்லை. அவைக்குறிப்பிலேயிருந்து நீக்குகிறேன். ஆனால் திரு. அழகிரி அன்றைக்குப் பேசிய கூற்று தவறு என்பதை நான் சொல்லித்தான் ஆக வேண்டும்.

திரு. ஆர். சிங்காரம்: ஓய மாட்டோம், ஒழிய மாட்டோம். மன்னிப்புக் கேட்கின்ற வரையில் ஓய மாட்டோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள்.

5. கவன ஈர்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. இரா. அப்பு நடேசன், இருக்கையில் இல்லை. (குறுக்கீடு) உட்காருங்கள். அடுத்ததற்குப் போய் ஆகிவிட்டது. (குறுக்கீடு) அடுத்த பிரச்சினைக்குப் போய் ஆகிவிட்டது. உட்காருங்கள்.

****மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.**